# சுமைகள்




காத்திருக்கிறோம். அலைகள் செத்த கடற்கரையில், கரையிற் தூங்கும் மணற்பரப்பில்; எமக்கான காலமது எம்மை வந்து சேருமென்று.

"சுமைகள்" இதழ்: 2 வைகாசி, ஆனி 1992.

# நெய்தலின் கோடுகள்..

## பழமைப் பக்கங்கள்



(அம்பா)

காரவேஞ்கரி நொச்சி கத்தாழை
கதம்பவேர் தும்பை காஞ்சோண்டி வேரும்
தேனிலே கொஞ்சம் விட்டுக் குழப்பி
மார்பிலே மருந்திட்டாளே வள்ளி

மார்பிலே மருந்தையிட்டு
மயக்காதேபோடி

மார்பிலே மருந்தையிட்டு
மயக்காதே போடி
காரவேஞ்கரி நொச்சிக் கத்தாழை
கதம்பவேர்தும்பை காஞ்சோண்டி வேரும்

வந்தான் வந்தான்
இங்கிலிசுக்காரன்
வந்ததெல்லோ வெடி
வச்சானேயடா
பட்டணத்தான்/ சுட்ட குண்டில்
பத்துக்கப்பலும்/ பாய்வலிக்க
வந்தான் வந்தான்/ இங்கிலிசுக்காரன்..
வந்தெல்லோவெடி/ வச்சானேயடா...


காலச்சுவடு

*சுந்தர ராமசாமி*
151, Ramavarmapuram
Nagarkovil 629002,
South India

# ஸ்தாவாங்கரில் மேதினம் –
# ஒரு விமர்சனப் பார்வை.


ஆறுமுக ஆச்சாரியார்.

வைகாசி 1 தொழிலாளர் தினம் உலகெங்கும் கொண்டாடப்பட்டது. ஊர்வலங்கள், கோஷங்கள், மேடைப் பேச்சுக்கள் ஸ்தாவாங்கர் மாநகரில் தொழிலாளர் கூட்டமைப்பு, E C C எதிர்ப்பாளர்கள் (ஐரோப்பிய பொருளாதார சமூகத்தில் நோர்வே இணைவதை எதிர்க்கும் அமைப்பு) சோசலிட்டுக்கள் மற்றும் இடதுசாரிக் கட்சிகளும் தொழிலாளர்தின ஊர்வலத்தில் பங்கேற்றன. சர்வதேச தலையிடியாகக் கருதப்படும் பாலஸ்தீன ஆதரவாளர் அணி, கூர்திஸ்தான் அணியினருடன் தமிழர்கள் சிலரும் உட்பட ஊர்வலத்தின் இறுதியில் சில சுலோக அட்டைகளைத் தாங்கிய வண்ணம் சென்றனர்.

ஸ்தாவாங்கர் Folken க்கு முன்னால் ஆரம்பிக்கப்பட்ட ஊர்வலம், நகர மையமான சந்தைப் பகுதியில் வந்து முடிவடைந்தது. அங்கு நிகழ்ந்த மேதின உரையில் ஊர்வலத்தை ஒழுங்கு செய்த பங்கெடுத்துக் கொண்ட அமைப்பினர் தமது கொள்கை கருத்து, இலட்சியம் சம்பந்தமாக உரையாற்றினர்.

ஊர்வலத்தைக் கண்ணுற்றபோது பழைய பல நினைவுகள் வந்து போயின. பாண்டுவாத்திய இசையும் அதற்கேற்ப நோர்வேஜிய மக்களின் வீர நடையும் என்னுள் ஒருவித கிளர்ச்சியை ஏற்படுத்தியது. அவரைத் திட்டி, இவரைத்திட்டி கோஷம் போட்ட பல ஊர்வலங்களில் நானும் பல தடவைகள் பங்கேற்றதுண்டு. அதேவேளை அமைதியாக தேசியக் கொடியினை ஏந்தி

"அனைவருக்கும் வேலைகொடு"

"ECC இல் இணைவது தேசத்தை விற்பதாகும்"

"அனைத்து இனமும் சேர்ந்து வாழ்வோம்"

என சுலோகங்களை உயர்த்திப் பிடித்தபடி அமைதியாக நடந்ததால் அந்த ஊர்வலம் சண்டையில்லாத எம்.ஜி. ஆர் படத்தைப் பார்த்தது போல் உணர்வினை என்னுள் ஏற்படுத்தியது. ஆனாலும் அமைதி கொள்ள மறுத்து உள்ளம் அடிக்கடி உணர்ச்சி வசப்பட்டுக் கொண்டது.

ஆம் ! இன்று முதல்முதலாக எனக்குத் தெரிய தமிழர்கள் தொழிலாளர் தின ஊர்வலத்தில் வருகின்றார்கள். மூன்று கிலோ மீற்றர் நீளமான ஊர்வலத்தை வைத்த கண்கள் வாங்காமல் பார்த்தபடி நான். முடிவு நிலையில் நாலைந்து கறுப்பு மனிதர்களும் இறுதியில் வந்து கொண்டிருந்தனர்.

"தமிழர்களுடைய போராட்டத்தை அங்கீகரி"

"சிறிலங்காவில் மனித உரிமை மீறல்கள் நடக்கின்றது"

போன்ற 5 சுலோக அட்டைகளை 11 தமிழர்கள் தாங்கிய வண்ணம் வந்து கொண்டிருந்தனர். தனித்தமிழர்கள், சுத்த கலப்பற்ற தமிழர்கள் தவறாகக் கொள்வீர்களானால் அது தப்பாகும். பாலஸ்தீன விடுதலை இயக்க ஆதரவாளர்கள் ஊர்வலத்தில் சென்றபோது அவர்களுக்காக சுலோக அட்டைகளை உயர்த்திக் கொண்டு சென்ற அனைவரும் நோர்வேஜியர்கள். கூர்திஸ்தானியருடன் சேர்ந்து அவர்கள் சுலோக அட்டைகளை கொண்டு சென்றவர்களில் பெரும்பான்மையினரும் நோர்வேஜியர்களே. ஆனால் எம்மவரோ எவருடனும் சென்று கலக்காமல் சுதந்திரமாக தம் வேலை பார்ப்பது போல் சென்றனர்.

இறுதியாக ஊர்வலம் சந்தைப்பகுதியை அடைந்தது.மேதின உரைகள்தொடங்கின. பங்கெடுத்த அமைப்புக்கள் சார்பில் ஒவ்வொருவர் உரையாற்றத் தொடங்கினர். என்னுள் திரும்பவும் ஒரு கிளர்ச்சி. தமிழர்கள் சார்பில் பேசுபவர் என்ன சொல்லப் போகிறார் என்ற ஆதங்கம்தான். அதை இன்னும் தூண்டியது. பாலஸ்தீன அமைப்பின் சார்பில் பேசிய பாலஸ்தீனியர் தமது மொழியான அரபு மொழியிலும் பேசி அதனை நோர்வேஜிய மொழியிலும் பேசினார். அவர் பேசும்போது "எமக்கு சமாதானம் தேவை, அதை எவ்வழியிலும்




பெறத் தயார். கல்எறிந்தோ ஸ்ரேலியரின் காலில் விழுந்தோ நாம் பெறத் தயாராக உள்ளோம். அந்த சமாதானத்தைக் கண்டடைய மக்களே உதவுங்கள்" என்று கேட்டுக் கொண்டார். தனிப்பாலஸ்தீனம் வேண்டிப் போராடும் பாலஸ்தீன அராபியர்கள் அமைதி, சமாதானம் பற்றிப் பேசும்போது எம்மவர்கள் என்ன பேசப்போகிறார்கள் என்பதைக் கேட்பதற்கு ஆவலாக இருந்தது. ஆனால் அடுத்தாக அமைப்பாளர் அனைவரின் சார்பிலும் நன்றி தெரிவித்துக் கூட்டம் நிறைவுற்றது. எம்மவர்கள் பேசுவார்கள் எனக் காத்திருந்த என் எதிர்பார்ப்பிலும் மண். திரும்பி சுற்றுமுற்றும் பாரத்தபோது தமிழர்கள் எவரும் கூட்டத்தில் இல்லை.

200க்கும் மேற்பட்ட தமிழர்கள் வாழும்

இப்பகுதியில் 13 ஆண்கள் மட்டுமே ஊர்வலத்தில் கலந்து கொண்டனர் என்ற துயரம் ஊர்வலம் முடிந்து பலமணி சென்றும் என் மனதை விட்டு அகலவில்லை. பல வழிகளில் முயற்சித்து காரணங்களை அறிய முயன்றேன். முடியவில்லை. தமிழின உணர்வு, எழுச்சி, புரட்சி என்று பலப்பல பேசும் பலர்வாழும் ஸ்தாவாங்கர் மாநகரில் ஊர்வலத்திற்கு மக்கள் கலந்து கொள்ளாததிற்கு காரணம்தான் என்ன?

ஒழுங்குபடுத்தியோரின் குறைபாடா அல்லது இங்கு வாழும் எம்மவரின் அசட்டைத்தனமா? எது எப்படி இருப்பினும் ஊர்வலத்தில் கலந்து கொண்டோரும் ஒழுங்குபடுத்தியோரும் பாராட்டப்பட வேண்டியவர்களே!

"SUMAIHAL"
Almennings gt.1
4013 Stavanger
NORWAY

அன்புடன் வாசகர்களுக்கு,
சுமைகளை தொடர்ந்து பெற விரும்புவோர் வருட சந்தா-வாக 200-குரோணர்களை-மட்டும் செலுத்தி சந்தாதாரர்களாகி, எமது முயற்சிக்கு - உதவும்வண்ணம் நேசமாய்க் - கேட்டுக்கொள்கிறோம். மேலே குறிப்பிட்டுள்ள எமது முகவரிக்கு காசுக் கட்டளை மூலம் சந்தாப்பணத்தை அனு-ப்பிவைக்கவும்.

நன்றி.
சுமைகள் வெளியீட்டுக்குழு.




**SMÅSPARERE FORÉN EDER!**

Den beste sparerenten i markedet var tidligere en godbit forbeholdt de som kunne skyte inn svært store beløp. Ved å forene deg med andre i Avanse Rente blir denne muligheten tilgjengelig også for deg som ikke har millioner å rutte med*. På denne måten oppnår du samme høye rente som stor-investorene.

Avanse Rente gir 10,6 prosent.
(Årlig effektiv rente pr. 4/5-92.)

Haakon VII's gt. 2
Postboks 1904 Vika
0124 OSLO 1
Telefon 02 83 14 00

avanse

☐ JA, send meg Avanses lille røde om rentefond, med tegningsblankett.

Navn: ____
Adresse: ____
Postnr./sted: ____

Send kupongen til Avanse Forvaltning, Postboks 1904, 0124 Oslo eller fax den til oss på fax nr. 02-83 15 22

உலகின் அனைத்துவித யுத்திகளையும் கையாண்டுவந்த விளம்பர நிறுவனங்களும், வியாபாரப் பத்திரிகைகளும் இப்போது முதலாளித்துவ தனியுடமை நிறுவனங்களின் (வியாபார) விளம்பரங்களுக்கு பொதுவுடமைத் தத்துவத்தின் தந்தையாகிய கார்ல்-மாக்ஸ்சின் தத்துவ வார்த்தைகளையும், அவரின் புகைப்படங்களையும் பயன்படுத்தத் தொடங்கியுள்ளன. விளம்பர நிறுவனங்களும், பத்திரிகைகளும், சோவியத்தில் ஏற்பட்ட திருத்தலில்லாத மாற்றங்கள், மாக்ஸிஸ-தத்துவத்திலும் ஏற்பட்டுவிட்டதென-நினைத்தார்களோ என்னவோ???

# நிராதரவாக்கப்படும் நாளைய தலைமுறை.

சுமதி



இன்று உலகில் பல பாகங்களிலும் நடந்து கொண்டிருக்கும் யுத்தங்களினால் பல எதிர் விளைவுகளை நாம் சந்திக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் இருக்கிறோம். உயிர் இழப்புக்கள், அங்கங்களை இழத்தல், அநாதைகளாக்கப்படுதல் போன்றவை இன்று சர்வதேச ரீதியாக எம் முன்னே உள்ள பிரச்சனைகள். எமது தாய் நாடும் இந்நிலைமைக்கு விதிவிலக்கல்ல. அங்கே நடைபெறும் யுத்ததிற்கு அதிகமானவர்களின் உயிர்களை நாம் விலையாகக் கொடுத்த வண்ணமிருக்கிறோம். பலர் தமது உடலுறுப்புக்களை இழந்து அங்கவீனர்களின் பட்டியலில் சேர்கின்றனர். இதில் அதிகம் பரிதாபத்திற்குரியவர்கள் உற்றார் பெற்றவரை இழந்த யாருமற்ற நிலையில் நிராதரவாக இருப்பவர்களே. கணவனை இழந்த ஒரு பெண்ணினதும் அவளது குழந்தைகளினதும் வாழ்க்கை மிகவும் அல்லுறுகிறது. ஆனாலும் அவர்கள் உறவினர்கள் உதவியுடனோ அல்லது சுய முயற்சியினாலோ தமது வாழ்க்கையை ஏதோ ஒருவகையில் நடத்துகின்றனர். ஆனால் தாயையும் தந்தையையும் சேர்த்து பறிகொடுத்து தவிக்கும் சின்னஞ்சிறு குழந்தைகளின் எதிர்காலம் ஒரு பெரும் கேள்விக்குறியாகவே எம்முன்னே நிற்கிறது. இப்படி நிராதரவாக்கப் பட்டவர்களை அநாதைகள் என்ற முத்திரை குத்தி அவர்களின் வாழ்க்கையை சீரழிவுக்குள்ளாக்குகின்றது எமது சமுதாயம். இவர்களுள் சில குழந்தைகள் அவர்களுடைய உறவினர்கள் அவர்களது பிள்ளைகளைப் போலவே வளர்ப்பவர்களும் இருக்கின்றார்கள். ஆனால் இப்படி வளர்ப்பவர்கள் மிகவும் சிறுபான்மையினரே. வேறு சிலர் உறவினர்கள் என்றதனால் குழந்தைகளைப் பராமரிக்க வேண்டிய

நிர்ப்பந்தத்தில் அக் குழந்தைகளை வளர்க்கின்றனர். ஆனால் தமது பிள்ளைகளில் ஒன்றாகக் கருதாமல் அதனை ஒரு சுமையெனக் கருதி அவர்களை பலவித துன்பங்களுக்குள்ளாக்கி அவர்களின் பிஞ்சு உள்ளங்களில் பாதிப்பை, வெறுப்பை விதைக்கின்றனர். அத்தோடு இவ்வாறு நிராதரவாக்கப்பட்ட குழந்தைகளுக்கு வெளிநாட்டிலிருந்து சமூகசேவை நிறுவனர்கள் மூலம் கிடைக்கும் உதவிகளோ அவர்களை முழுமையாகச் சென்றடைவதில்லை. இப்படி வரும் நிதி உதவிகளினால் சமூகசேவை நிறுவனங்களுக்கும் குழந்தைகளுக்கும் இடையில் இருப்பவர்களே பயனடைகின்றனர். இவர்கள் மத நிறுவனங்களில் உள்ளவர்களாகவோ அல்லது குழந்தைகள் பாராமரிப்பு நிலையங்களை மேற்பார்வை செய்பவர்களாகவோ உள்ளனர். நம்நாட்டிலுள்ள ஒரு சில அநாதைச் சிறுவர் நிலையங்கள் (எல்லாநிறுவனர்களும் அல்ல) இத்தகைய மோசடிகளில் ஈடுபடுவதை நம்மில் பலர் அறிவோம்.

இவ்வாறு எம் தேசத்தில் இன்று பரிதாபத்திற்குரிய இந்தப் பிஞ்சுகளின் எதிர்காலம்தான் என்ன? குழந்தைகளே எமது எதிர்காலம். அவர்களே நாளைய சந்ததியினர் என்று பெருமை பேசிக் கொள்ளும் நாம் இவர்களுக்கு என்று என்ன வழியைக் காட்டப் போகிறோம்? இவர்களுக்கு ஒரு சரியான வழியைக் காட்டத் தவறுவோமாயின் சாதாரணமான நிலையிலிருந்து வேறுபட்டு வளர்வதோடு சமூகத்தில் வெறுப்பு, விரக்தி என்பன ஏற்பட்டு பல குற்றச் செயல்களில் எதிர்காலத்தில் ஈடுபடவும் வாய்ப்புகள் உண்டு. (உ+ம் ருமேனியாவில்..) எனவே இது விடயமாக சரியான தீர்க்கமான ஒரு முடிவை நாம் எடுக்க வேண்டியவர்களாகிறோம்.

அதேவேளை இதற்குத் தீர்வுதான் என்ன என்று ஆராய்கின்ற போது பல விடயங்களை நாம் அலசிப் பார்க்க வேண்டும். இன்று எமது தேசத்து மக்களுக்கு அல்லது எம்மவர்களுக்கு தற்போது பிரதானமான பிரச்சனையாகத் தலைதூக்கியுள்ளது நாட்டுப் பிரச்சனைதான். இதனால் பொருளாதாரபலத்தை இழந்து அன்றாட உணவுத் தேவையைக் கூட பூர்த்தி செய்ய முடியாத நிலையில் ஏங்குகின்றனர். எனவே இந்தப் பிரச்சனையை இட்டு அவர்கள் சிந்திப்பதோ அல்லது செயற்பட தூண்டுவதோ இயலாத காரியம். ஆனால் புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் நாங்கள் இதனையிட்டு சிந்திப்பதற்கும் செயற்படு வதற்குமான சூழலில் இருக்கிறோம். இரண்டு விதமான தீர்வுகள் எம் முன்னே இருக்கின்றன. ஒன்று ஏற்கனவே எமது தேசத்தில் இயங்குகின்ற நிறுவனங்களுக்கு நாம் ஒவ்வொருவரும் பொறுப்புணர்வுடனும், விருப்புடனும் போதியளவு உதவிகளைச் செய்வது, இரண்டாவது புலம் பெயர்ந்து வாழும் எம்மவர்கள் ஒவ்வொருவரும் (ஒவ்வொரு குடும்பங்களும்) ஒரு குழந்தை வீதம் எடுத்து வளர்ப்பது. இவையிரண்டும் தற்போதைய சூழலில் (குறைந்தபட்சம்) சரியான தீர்வு என நம்புகிறேன். ஆனாலும் இவை ஒவ்வொன்றையும் பற்றித் தனித்தனியாக ஆராய்வது மிக அவசியம். முதலில் நிறுவனங்கள் மூலம் வளர்ப்பது பற்றி ஆராய்ந்து பார்த்தால் அதிகளவு பிரச்சனைகள் உண்டு என்பதை நாம் கண்டு கொள்ளலாம். இவ்வாறு செய்யும் போது ஏற்கனவே குறிப்பிட்டது போல் இங்கிருந்து கிடைக்கின்ற உதவிகள் முழுவதுமாக அக்குழந்தைகளுக்குப்

பயன்படுமா என்ற பிரச்சனை உள்ளது. அனைத்துக் குழந்தைகளுக்கும் ஒரே சீரான கவனிப்பில் வளர்க்கப்படுவார்கள் என்பதைத் தவிர இதில் பெரிதளவு நன்மை பயப்பதாய் இல்லை. இவ்வாறு நிறுவனங்கள் மூலம் பராமரிக்கப்படும் குழந்தைகள் உளவியல் ரீதியான பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். அதாவது இது போன்ற குழந்தைகளைப் பராமரிக்கும் நிறுவனங்கள் அநாதைக் குழந்தைகள் இல்லம் அல்லது அநாதைகள் புகலிடம் என்றே பெயர் சூட்டப்பட்டு அழைக்கப்படுகின்றன. இதனால் குழந்தைகளின் உள்ளத்தில் தாங்கள்


*சரிநிகர்*

*இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமான அமைப்பால் வெளியிடப்படும் மாதப் பத்திரிகை. நடுநிலை தவறாமல் துணிச்சலான விமர்சனங்களையும், கருத்துகளையும் வெளியிடும் ஒரேயொரு இலங்கைத் தமிழ்ப் பத்திரிகை. வருட சந்தா 15 டொலர்கள்*

*முகவரி*

SARINIGAR
6, Aloe Avenue
Colombo 3
Sri Lanka




யாருமற்றவர்கள் அநாதைகள் என்ற தாழ்வுணர்வு இங்கே உருவாகிறது. அத்தோடு இத்தகைய நிலையங்களில் பணிபுரிபவர்கள் எத்தனைபேர் உண்மையான கடமை உணர்வுடனும் அதற்கு மேலாக குழந்தைகளை அன்போடும் பராமரிப்பார்கள் என்பது கேள்வியே. மேலும் இங்கிருந்து பொருளாதார உதவிகளை நாம் தொடர்ச்சியாக வழங்க முடியுமா? என்பதும் (அதாவது இங்குள்ளவர்களின் பொருளாதார நிலை என்றும் ஒரே மாதிரியாக இருக்க முடியாது) பிரச்சனைக்குரியதே. மேலும் இன்றைய எமது தேசத்து சூழ்நிலையில் இச் செயற்பாடு சாத்தியம் இல்லாத ஒன்றாகவே காணப்படுகிறது. அத்தோடு தற்போதைய சூழ்நிலையில் அக்குழந்தைகள் வளர்க்கப்படுமாயின் அவைகளை மூளைச் சலவை செய்வதன் மூலம் அவர்களின் பாதை மாற்றப்படலாம்.

இரண்டாவதாக கூறிய வெளிநாடுகளில் உள்ள ஒவ்வொரு குடும்பத்தினரும் ஒவ்வொரு குழந்தையை எடுத்து வளர்த்தல் பற்றிச் சற்று உற்று நோக்குதல் வேண்டும். அவ்வாறு ஒவ்வொரு குடும்பத்தினரும் ஒவ்வொரு பிள்ளையை தமது குழந்தை என வளர்ப்பதும் மிகவும்

எளிதான விடயமல்ல. இங்கு வாழும் நாம் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து கொள்ளக் கூடிய விதமாகவும் புறக்காரணிகளின் பாதிப்புக்கள் அரிதாக உள்ள சூழ்நிலையிலும் இருப்பதால் இத்தீர்வு சாத்தியமடையலாம். குழந்தைகளை இங்கே எடுத்து கல்வி வசதிகளும் அளிப்பதால் அவர்கள் வாழ்க்கையில் புதிய திசையில் ஒளிவீச ஆரம்பிக்கும். மேலும் உளவியல் ரீதியான பாதிப்புக்களும் குறைவாக இருக்கும். எமது வருங்கால சமுதாயம் நல்ல நிலைமையில் உருவாக வேண்டும் என்ற நல்ல சிந்தனை உடைய ஒவ்வொருவரும் இம் முயற்சியில் துணிந்து இறங்குவார்களாயின் பாராட்டப்பட வேண்டியதே. எனவே அன்பு உள்ளங்களே நாம் நமது தாய்த்திரு நாட்டிற்காக ஏதாவது செய்ய வேண்டுமென்று விரும்பினால் இது போன்ற பயனுள்ள முயற்சியில் இறங்குவோமாக.

மேற்குறிப்பிட்ட கருத்துக்கள் எமது முடிந்த முடிவல்ல. இது தொடர்பாக வாசர்களிடமிருந்து கருத்துக்கள் ஆக்கபூர்வமான விமர்சனங்கள் ஆலோசனைகள் சுமைகள் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

சுமதி


---

பங்குனி 1941.

. . . . . . . . . . .

எரிந்த எம் வீடுகள்
இறந்த எம் மக்கள்
எம் இதயங்களை
அதிர வைக்கின்றன.

மீண்டும் மீண்டும்.



எம் இதயங்களைப்
பிளக்க வைக்கின்றன
ஆழமான, வேதனையான ரணத்துடன்.

எரிந்த எம் வீடுகள்,
இறந்த எம் மக்கள்.
ஒவ்வோர்
உதிர்வுகளின் பின்னும்
ஆயிரமாய் ஜனிப்புகள்.

வேறும்
ஆயிரம் பேர் சேர்ந்து நிற்பர்.

ஆவேசத்திலும்,
அம்மணமான எதிர்ப்பிலும்.

ஓ...
மரணித்த தோழர்களே
அவர்கள்
இனியும் எம்மை
அடிமைகொள்ளார்.

-இங்கர் ஹாகரப்-
(தமிழில்: அடேலயன்)

# வாசகர்கடிதம்.

வணக்கத்துடன். "சுமைகளுக்கு"

"சுமைகள்" என்னை நோக்கி வந்தது. அதனைத் தூக்கி ஒரு கரையில் வைத்து விட்டேன். ஒரு நாள் நித்திரை வரவில்லை: உடனே "சுமைகள் என்னைப்பார்த்துச் சிரித்தது. கையிலெடுத்தேன், படித்தேன். மிகவும் நன்றாகவும், படிக்கப் படிக்க ஆர்வத்தையும் தூண்டியது. அப்போது யோசித்தேன் இவ்வளவு திறமையுள்ளவர்கள் ஸ்தவங்கரில் இருந்தும் ஏன் பயன்படுத்தாமல் விட்டோமென்று. இவர்களின் பணி தொடர வேண்டும்.

மறுபக்கம் நான் பார்க்கும்போது இப் புத்தகத்தில் அரசியலின் ஒருபக்க சார்பு இருக்கக்கூடாதென்பது எனது ஆவல்.

யோகன்
(ஸ்தவங்கர்)
27.5.92.

அன்புடன் "சுமைகளுக்கு"

முதலாவது "சுமைகள்" கிடைத்தது. அரிய, வரவேற்கத்தக்க முயற்சி. வடிவமைப்பில் அவசரம்தெரிகிறது. ஆக்கத்தெரிவு அருமை. எவ்வளவு கால இடைவெளியில் "சுமைகள்" வெளியாகுமென்பது குறிப்பிடப்படவில்லையே ஏன்? தொடர்ந்து "சுமைகள்" வெளிவர என் இனிய வாழ்த்துக்கள்.

இப்படிக்கு
வீ. புஸ்பராசா
கேர்னிங், டென்மார்க்

சுமைகளுக்கு,

சுமைகள் அறிமுக இதழ் பார்த்தேன். அட்டையிலே சுமையுடன் ஒரு பெண். அவள் நெஞ்சின் சுமையைக் கூறியது அட்டைப் படச் செய்தி. உண்ட வீட்டிற்கு....... புலம் பெயர்வும் எமது மொழியும்... போன்ற அம்சங்கள் வெளிநாட்டில் உள்ள தமிழர்களைச் சிந்திக்கத் தூண்டுகின்றன. மறுபதிப்புக்களும் நன்றாக இருந்தன.

இரவல் முகவரியைக் கூடத் தப்பில்லாமல் எழுதத் தெரியாதவர்கள் யாரோ, விமல்ராஜ்?

குறைந்தபட்ச பணியாக வெளிவரும் சுமைகள் பரந்து பட்டு வளர வாழ்த்துக்கள்.

இங்ஙனம்
சுகந்தன்.
4033 Forus.

அன்புடன்
சுமைகள் ஆசிரியருக்கு,

"சுமைகள்" அறிமுகப்பிரதியை படிக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அனைத்துத்தர மக்களும் படித்துப்புரிந்துகொள்ளக்கூடிய இலகுவான, எளிய தமிழில் எழுதப்பட்டிருந்ததால் — சிறுவர்களும் "சுமைகளை" படிக்க இலகுவாக இருந்தது.

அடுத்த இதழில் சிறுவர்களுக்கும் சில பகுதிகளை ஒதுக்கினால் நல்லது. மேலும், "சுமைகள்" இடைநிறுத்தப்படாது தொடர்ந்து வெளிவர வேண்டுமென எதிர்பார்க்கிறேன்.

இப்படிக்கு
அன்புடன் சுந்தர்.
ஸ்தவங்கர்

## வாசகர்கடிதம்.

அன்புடன் சுமைகளுக்கு,

சுமைகளைச் சுகமாக அறிமுகப் படுத்திய நீங்கள், சுமைகளின் நிலைப்பாட்டைப் பற்றி எதுவும் குறிப்பிடவில்லையே?

இதை அறிமுக இதழில் எதிர் பார்ப்பது அளவுக்கு அதிகம்தான்.

பத்திரிகை பொலிவுடன் உள்ளது. ஆனாலும், பல நல்ல அம்சங்களும், சில குறைகளும் காண முடிந்தது. உதாரணமாக "தனுவின்," "உண்ட வீட்டிற்கு...," என்ற கட்டுரையில் பொருளாதார நோக்குடன் நாடுவிட்டு நாடு அகதிகளைக் கடத்தல் என்ற சொல்லின் அர்த்தத்தை எவ்வாறாக எடுப்பது என்ற குளப்பம் எனக்கு மட்டுமல்ல, வேறுசிலருக்கும் இருப்பதைக் காண முடிந்தது.

தயவு செய்து தனுவும், சுமைகளும் இக்கட்டுரை தொடர்பாக தத்தமது கருத்துக்களை வெளியிடுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு
அரவிந்த்
(ஸ்தவங்கர்)

அன்புடன் வாசகர்களுக்கு,

எதிரொலி பகுதியை தொடரும் முகமாக, பல தரப்பினரையும் சந்தித்து கருத்தறிந்து வெளியிடவுள்ளோம். இதுதொடர்பாக வாசகர்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களையும், விமர்சனங்களையும் எதிர் பார்க்கின்றோம்.

"சுமைகள்"
வெளியீட்டுக்குழு

"சுமைகளில் வெளியாகும் படைப்புகளுக்கு அவற்றின் ஆக்கதாரரே பொறுப்பு.

சுமைகளில் வெளியாகும் கருத்துக்கள் சுமைகளின் கருத்தாய் இருக்கவேண்டிய அவசியமில்லை.

சுய முகவரியிடப்படாத ஆக்கங்கள் பிரசுரிக்கப் படமாட்டாது.

"சுமைகளுக்கு அனுப்பி வைக்கப்படும் ஆக்கங்களின் பிரதியை மீளப்பெறுவதற்கு விரும்புவோர், சுய விலாசமிட்ட தபாலுறையை அனுப்பிவைக்கவும்.

"சுமைகள்"
வெளியீட்டுக்குழு

# எதிரொலி... எதிரொலி... எதிரொலி...

ஒரு

கதையாடல்



"பேர் ஹொய்னஸ்"

- சமூக சேவை அலுவலர் -
(நிஸ்ந்தா அகதிமுகாம்)
· ஸ்தவங்கர் -

சுமைகள்: நீங்கள் நீண்டகாலமாக இங்கு அகதிகளாக வருகை தரும் வெளிநாட்டவர்களுடன் பணிபுரிந்து வருகின்றீர்கள். அவர்களுடன் பழகியதில் பொதுவாக உங்களுக்குக் கிடைத்த அனுபவத்தைக் கூற முடியுமா?

பேர்: ஆம் பலருடன் பழகியிருக்கிறேன். ஆனால், அந்த அனுபவங்களைப் பொதுவாகக் கூறமுடியாது. இங்கு வரும் ஒவ்வொருவரும் வித்தியாச 'o வித்தியாசமான நாடு, கலாச்சாரம், மொழி, அரசியற் பின்னணிகளைக் கொண்டவர்களாக இருக்கின்றார்கள். ஆகவே ஒவ்வொருவருடன் பழகுவதும் புதுப் புது, விதவிதமான அனுபவங்கள்.

கே. இந்த அகதிமுகாம் யாரால் நடாத்தப் படுகிறது?

ப: நோர்வேமக்கள் நலன்புரி அமைப்பினால் நிர்வகிக்கப்பட்டுவருகின்றது. இதற்கு பொருளாதார உதவியும், வழிநடத்தலும் வெளிநாட்டவர் திணைக்களத்தினால் வழங்கப்படுகிறது.

கே: இங்கு வசிக்கும் ஓர் அகதியாக மனுசெய்தவருக்கு மாதமொன்றிற்கு வழங்கப்படும் உதவித்தொகை எவ்வளவென்று கூறமுடியுமா?

ப: 2700குரோணர்கள். இது ஒருமாதத்திற்கான அனைத்துச் செலவுகளுக்குமானது. ஆனால், வீட்டுவாடகை, அல்லது, தங்குமிடத்திற்கான செலவை நாங்கள் ஏற்கின்றோம்.

கே: நீங்கள் கூறியதுபோல் பலவிதப்பட்ட மொழி, கலாச்சாரப் பின்னணியுள்ள தஞ்சங்கோரியோருடன் பணிபுரிவது கஷ்டமாக இல்லையா? உதாரணமாக, மொழிப் பிரச்சனை.

ப: சிலவேளைகளில் உண்மையிலேயே கஷ்டந்தான். ஆனால், வெகு சுவாரஸ்யமானது. மொழிப்பிரச்சனையைப் பொறுத்தளவில் மொழிபெயர்ப்பாளர்களைப் பாவிக்கின்றோம். ஆனாலும் , நாங்கள் முழுதாக எல்லாவற்றையும் புரிந்து கொள்வோமென்றில்லை.

கே: அகதிகளுடன் பணிபுரியும் பல சமூகசேவையாளர்களுடன் பேசியபோது, அவர்கள்; வெளிநாட்டவருடன் வேலைசெய்வது கடினம், காரணம் "ஏமாற்றும் பேர்வழிகள், சோம்பேறித்தனமுடையோர், உரிமையைப் பெயும்வேளை; கடமையைச் செய்கிறார்களில்லை "என்று கூறுகின்றனர்.

ப: இது ஒரு கடினமான வினா. சமூகசேவை நிறுவனங்களின் பணியாளர் சிலர் கூறுவது ஒருபக்க காரணமென்று நான் நினைக்கின்றேன். ஒவ்வொரு தனிமனிதனும்; தன்மையில், குணத்தில், நடத்தையில் வேறு பட்டவர்கள். நோர்வேயின் சட்டதிட்டங்கள், சமூக அமைப்பு சரியாக இருக்குமானால், சமூக சேவையாளர்கள் ஒன்றாக முயற்சியெடுப்பார்களானால், நல்லதோர் "கலப்புச் சமுதாயத்தை" இங்கு உருவாக்க முடியும்.

சி: நீங்கள் எப்படியான ஓர் சமுகத்தில் வாழ விரும்புகிறீர்-கள்?, அதாவது, நீங்கள் அனைத்து இனத்தவரும் இணைந்து -வாழும் ஓர் சமுகத்திலா, அல்லது.........?



டே: எல்லா மக்களும் இணைந்த நல்லதோர் கலப்புச் சமுதாயத்தில். பலவிதமான கலை, கலாச்சாரமும் காணப்படும் அழகானதோர் சமுகத்தில்தான் வாழ விரும்புகின்றேன். இந்த எண்ணம் நோர்வேஜிய மக்களிடம் குறைந்து காண-ப் படுகின்றது. வெளிநாட்டவர் என்றால் ஏற்படும் அந்த பய, அச்ச உணர்வுகள் 70களில் வெளிநாட்டவர் - வருகையின்போது காணப்பட்டதுபோலவே இன்னும் இரு-க்கின்றது. இது மாற வேண்டும்.

சி: அனைத்து கலை, கலாச்சாரப் பின்னணியைக்கொண்ட பல இன மக்களையும் இணைத்து, அந்தப் புதிய சமுதாயத்தை எப்படி உருவாக்கலாமென்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

டே: நல்ல கேள்வி. இதற்குப் பதிலளிப்பதற்குமுன் ஒன்றைக்கூறி விடுகின்றேன். நோர்வேயில், வெளிநாட்டவர் சம்பந்தமான அரசியற் சட்டங்கள், கொள்கைகள் தீர்க்கமான-தாக இல்லை. இன்னும் கூறப்போனால் ஒழுங்கானதாக

இல்லை. பொதுவாக எல்லா அரசியற் கட்சிகளும் கொள்கையளவில் வெளிநாட்டவருக்கு ஆதரவாகப் பேசினாலும், நடைமுறையில் ஒன்றும் செய்வதில்லை. வெறுமனே கோசங்கள் போடுவதனாலும், கொள்கைகளை எழுதிவைப்பதனாலும் நல்லதோர் கலப்புச் சமுதாயத்தை உருவாக்க முடியாது. புதிய சட்டங்கள் இயற்றப்பட்டு, அவை செயற்படுத்தப்படல் வேண்டும். அதற்கு மேலாக அனைத்து சமுகங்களையும் இணைக்கும் வகையில் மாகாண, நகரசபைகள் ரீதியாக செயற்திட்டங்கள் தீட்டப் படல் வேண்டும். அதற்கேற்ப அனைவரும் ஒத்துழைத்து, புரிந்துகொண்டு செயற்பட வேண்டும்.

இதனை உடனே செயற்படுத்த முடியாது; படிப்படியாக முன்னெடுக்கப் படல் வேண்டும்.

நி: நோர்வேஜிய மக்களிடையேயும், அகதிகளுடன் பணிபுரிபவர்களுள்ளும், இங்குவரும் அகதிகள் பொய் கூறுகின்றனர், உண்மையிலேயே இவர்களுக்கு அரசியல் தஞ்சம் கோருந் தகுதியில்லை: பொருளாதார காரணங்களுக்காகவே இங்கு வருகை தருகின்றனர்" என்றகருத்து நிலவுகின்றது. இதுபற்றி உங்கள் கருத்து என்ன?

ஓப: நான் முன்பு கூறியது போல வித்தியாசமான பின்னணிகளுடன் பலர் நோர்வேக்கு வருகை தருகின்றனர். அவர்களில் பெரும்பாலான அகதி விண்ணப்பதாரிகளுக்கு நியாயமான காரணங்கள் உண்டென்று நான் நினைக்கிறேன். ஒருசிலர் வேண்டுமானால் பொருளாதார காரணங்களுக்காகவும், வேறுசில காரணங்களுக்காகவும் அகதியாக விண்ணப்பிக்கலாம். ஆனால் எல்லோரையும் கூற முடியாது.

என் அனுபவத்தில் சிலரைச் சந்தித்திருக்கிறேன். எந்த அரசியல் தஞ்சம் கோரும் அடிப்படைக்காரணிகளோ, அல்லது வேறுவித காரணங்களோ இல்லாமல் தஞ்சம் கோரியவர்களை. ஆனால், நான் எந்த சந்தர்ப்பங்களிலும் அவர் ஏன் வந்தார், எதற்கு வந்தார் என்று ஆராய முற்படவில்லை. அது எனது வேலையுமல்ல.

சு: தமிழர்கள் பலர் இன்று அகதிகளாக ஐரோப்பிய, வட அமெரிக்க நாடுகளுக்கு குடிபெயர்கின்றனர். அதற்குக் கூறப்படும் காரணம், இலங்கையில் நடைபெறும் யுத்தம். நீங்கள் இதுபற்றி என்ன நினைக்கிறீர்கள்? உண்மையில யுத்தம்தான் காரணமா?, அல்லது பொருளாதார – காரணங்களா?



பே: நான் நினைக்கிறேன் இரண்டு காரணங்களுக்காகவுமென்று. பல இளைஞர்கள், யுவதிகள் அரசியற் காரணங்களால் புலம் பெயர்கின்றனர். அதேவேளை ஐந்து பிள்ளைகளையுடைய ஒரு தந்தை யுத்த காரணத்தைக் காட்டி பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்திசெய்ய புலம்பெயர்ந்து இங்கு வருகின்றாரென்றால் அதைத் தவறென்று கூற – மாட்டேன். எந்தவொரு மனிதனும் தனது அன்பானமனை–வி, பிள்ளைகள், சுற்றத்தை விட்டு, தனித்துவாழ விரும்புவதி–ல்லை. நான்கூட அப்படியானதொரு நிலையில் இருந்தால் அரசியற்காரணங்களால் பாதிப்படையாவிட்டாலும், எனது குடும்பநிலை கருதி, யுத்தசூழலைச் சாதகமாகப்பாவித்து வெளியேறத்தான் செய்வேன். இது தவறல்ல.

சி: நீங்கள் பல தமிழர்களுடன் பணி புரிந்துள்ளீர்கள்; அவர்களுடன் உங்களுக்கேற்பட்ட அனுபவங்களை, அல்லது தமிழர்களைப்பற்றி உங்கள் கருத்து என்னவென்று கூற முடியுமா? நாங்களும் தமிழர்கள் என்பதற்காக எங்களது தவறான பக்கங்களைக் கூறாமல்விடவேண்டாம்; வெளிப்படையான கருத்தை உங்களிடம் எதிர் பார்க்கின்றோம்.

பு: நீங்கள் கூறுவதுபோல் தமிழர்களுடன் பழகியிருக்கிறேன். முதலில் தமிழர்கள் பற்றிய நல்ல அபிப்பிராயத்தைக் கூறி விடுகின்றேன்.

வேறு இன மக்களுடன் ஒப்பிடும்போது, தமிழர்களுக்கு கோபம் வருவது குறைவு. எதையும் பேசித் தீர்வு காணவேண்டுமென்று நினைப்பவர்கள். தமிழ்க் கலாச்சாரத்திற்கும் (நடைமுறைக் கலாச்சாரம்) எங்கள் கலாசாரத்திற்கும் என்னைப் பொறுத்தமட்டில் பெரிய வித்தியாசம் இல்லாதிருப்பதனால், தமிழர்களை இலகுவில் புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கின்றது. இதேவேளை; மறு பக்கத்தில் பார்ப்போமானால், தமிழர்களுடன் சேர்ந்துகொள்வது, அல்லது நட்புக்கொள்வது கடினம்.


அவர்களுக்குத் தேவை ஏற்பட்டால் மட்டும் தேடிவருவார்கள். மற்றும்படி தாங்களுண்டு, தங்கள் வேலையுண்டு என்று ஒதுங்கிக் கொள்வார்கள்.

மேலும் ஒரு முக்கிய விடயம்.'தவறாக நினைக்கக் கூடாது'. எனக்குத் தெரிந்த பெரும்பாலான தமிழர்கள் ஏமாற்றுக்காரர்களாகவே இருக்கின்றனர். அவர்கள்; எங்களை ஏமாற்றுவதாக நினைத்துக்கொண்டு, தங்களைத்தாங்களே ஏமாற்றுகின்றனர். உதாரணமாக:

தமிழ் மொழியிலுள்ள உறவுகளைக் குறிக்கும் - பெயர்ச்சொற்கள் சிக்கலானதாகும். அதனுடன் பல சந்தர்ப்பங்களில்; நண்பர்களைக்கூட உறவுமுறைகொண்டு அழைப்பார்கள். ஒருவர் அகதி முகாமைவிட்டு வேறு முகாமிற்கு மாற வேண்டுமானால்; நண்பர்களை, சொந்த மச்சான், மாமன் என்ற பொய்யைக் கூறி மாற்றல் வாங்கிப்போய்விடுவார்கள். பின், மாறிச்சென்ற முகாமில் வசதிக்குறைவு என்றுகாரணமிட்டு திரும்பவும் இங்கு வருவதற்காக முன்பு கூறிய பொய்யை வாபஸ் வாங்கிவிடுவார்கள். இதனால்

பாதிப்படைவது அவர்களே. மேலும், உதவியின்றித் தனிமையில் ஓர் தமிழன் இங்கு வந்தால், அவனை முதல் வந்தோர், அல்லது விபரம் தெரிந்த தமிழர்கள் தங்கள் நலனுக்காக அவர்களைத் தப்பான வழிகளில் பாவிக்க முயல்கின்றனர். இப்படியான பல நிகழ்வுகளை பலதடவை சந்தித்திருக்கின்றேன்; எனக்குள் இன்னுமொரு ஐயப்பாடு உள்ளது; மேலே நான் குறிப்பிட்டுள்ள நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் நோர்வேக்கு வருவதற்கு முன் வேறு ஐரோப்பிய நாடுகளில் வசித்துள்ளார்கள் என நினைக்கின்றேன். இப்படியானவர்களின் நடை, உடைபாவனை, இடையிடையே பேசும்போது பாவிக்கும் சிலவார்த்தைப்பிரயோகங்கள் ஆகியவற்றில் ஐரோப்பியத் தன்மை காணப்படுகின்றது. நீங்களும் அறிந்திருக்கலாம்.

சி: இலங்கையைப்பற்றி உங்களுக்கு என்ன தெரியும்?



அழகான கடற்கரைகள், தேங்காய், பழவகைகளுடன் கூடிய, இந்தியாவுக்கு அருகில் அமைந்திருக்கும் ஓர் தீவு. அத்துடன், இலங்கையின் ஆரம்ப வரலாறு சம்பந்தமாகவும் கொஞ்சம் தெரிந்து வைத்துள்ளேன்.

(சிரித்தபடி) அனுமன், சீதைகளையும் வாசித்துள்ளேன்.

Jr: இன்றைய இலங்கையைப் பற்றி, அப்பொழுது அங்கு நடைபெறும் யுத்தத்தைப் பற்றி தெரிந்து கொண்டுள்ளீர்களா?

Bu; இலங்கையில் நான்குவகைச் சமயத்தவர் வாழுகின்றனர். இந்து, முஸ்லிம், பௌத்த, மற்றும் கிறிஸ்தவ சமயங்கள். இரு மொழி பேசும் மக்கள் வாழ்கின்றனர். இன்று தமிழர்களுக்கும், சிங்கள மக்களுக்குமிடையில் யுத்தம் நடைபெற்று வருகின்றது. ஆங்கிலேய காலத்தில் இலங்கையில் பிரதான பதவிகளில் அமர்ந்திருந்த தமிழர்கள், இன்று சிங்களப்பேரினவாதம் தலை தூக்கி, அவர்களை ஒடுக்கி வருவதனால் அதற்கெதிராகப் போராடி வருகின்றனர்.

Jr: இலங்கையில் நடைபெறும் யுத்தத்தை எப்படி நிறுத்தமுடியும், அல்லது எந்தவித அரசியற்தீர்வை ஏற்படுத்த முடியுமென்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

Bu: முதலில் சர்வதேசமும் யுத்தம் நடைபெறும் நாடுகளுக்கு ஆயுத விற்பனையை நிறுத்தவேண்டும். அதைவிட தமிழர்களின் போராட்டமானது பாதை தவறிவிட்டது; அல்லது குறிக்கோள் தவறிய யுத்தமாகவே இன்று நடைபெற்று வருகின்றது. இனங்களுக்கிடையிலான எதிர்ப்பும், காழ்ப்புணர்வும் வளர்ந்தவண்ணமிருக்கின்றது. மனித உரிமைகள் மீறப்படுகின்றது. ஆனால் இதற்குத் தீர்வு என்று சிற்றறிவுக்கேற்ப கூறமுடியாது. பொறுத்திருந்து பார்ப்போம்.

Jr; இறுதியாக ஒர் வினா. தற்போது நோர்வேயில் நிற, இனவாதம் தலை தூக்கியுள்ளது. இதற்குக் காரணமென்னவென நீங்கள் கருதுகிறீர்கள்?

Bu, இது இங்குமட்டுமல்ல, கொம்யூனிஸ்டுகளின் வீழ்ச்சிக்குப்பின் பாசிஸ்டுகளின் வளர்ச்சியால் முழு ஐரோப்பாவிலும் நிற, இனவாதம் தலை தூக்கியுள்ளது. இதற்கு நோர்வேயும் விதிவிலக்கல்ல. நோர்வேயின் பொருளாதார வீழ்ச்சியும், மற்றும் பல கார-




ணங்களும் இதை வளர்ப்பவையாகவுள்ளன.

எது எப்படியானாலும், ஒர் சிறந்த வெளிநாட்டவர் கொள்கை நோர்வே அரசியலில் உருவாக்கப்படுமானால், நிற, இனவாதம் களைந்து, அதிசிறந்த "கலப்புச் சமுதாயத்தை" நோர்வேயில் உருவாக்கக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது.

சு: இவ்வளவு நேரமும் எம்முடன் ஒத்துழைத்து, எம்முடன் உரையாடியதற்கு நன்றி.

KU: நன்றி. எனது ஒத்துழைப்பு என்றும் "சுமைகளுக்கு" உண்டு. உங்கள் பணிதொடர எனது வாழ்த்துக்கள்.

# மரபும் விழாவும்

கலாநிதி சி. மௌனகுரு



யாழ்ப்பாணப் பகுதியில் ஆடப்படும் கூத்துக்கள் வடமோடிக் கூத்து, தென்மோடிக்கூத்து, காத்தான்கூத்து, கொட்டகைக்கூத்து எனப் பலவகையின. இவற்றுள் கத்தோலிக்கமதம் சார்பான கருத்துக்களைப் பெரும்பாலும் கூறுவதும், கரையோரப் பகுதிகளிற் பெரும் செல்வாக்குற்றதுவுமான தென்மோடிக்கூத்து முக்கியமானது. ஈழத்துத் தமிழ்நாடக உலகுக்கு முக்கியமான நாடக விற்பன்னர்கள் பலரை இம்மரபு தந்துள்ளது.

தென்மோடிக்கூத்து மரபு யாழ்ப்பாணத்தில் மாத்திரமன்று, முல்லைத்தீவு, மன்னார், மட்டக்களப்பு, தம்பலகாமம் ஆகிய தமிழர் வாழ் பிரதேசங்கள் எங்கணும் வழங்கி வருகிறது. மட்டக்களப்புப்

பிரதேசத்தில் இம்மரபில் வட்டமேடையும், ஆட்டமும் பிரதான அம்சம் பெறுகின்றன. ஆசியாவின் பிரதான நாடகமரபு ஆட்டமரபே என்பது அறிஞர் கருத்து. யாழ்ப்பாணத்தில் இம்மரபில் ஊறி வந்த வயது முதிர்ந்த அண்ணாவிமார்களுடன் நடத்திய பேட்டிகளினூடாக யாழ்ப்பாணத்திலும் இத்தென்மோடிக்கூத்துக்கள் முன்னர் வட்டமாக அமைக்கப்பட்ட மேடையில் முன்பக்கத்திரைகள் எதுவுமின்றி மக்கள் சூழ்ந்திருந்து பார்க்க ஆட்டங்கள் நிரம்பிய வகையில் நடத்தப்பட்டதாக அறிய முடிந்தது.

வட்டமேடையில் ஆடப்படுவதும், முன்பக்கத்திரைகள் இல்லாமல் நடிகர் பார்வையாளருடன் நேரடித்தொடர்பு கொள்ளுவதும் ஆட்டம் நிறைந்ததுமான இப்பண்புகள் பண்டைய நாடகங்களுக்குரிய முக்கியமான அம்சங்களாகும். இவ்வகையில் தென்மோடிக்கூத்தினை ஈழத்துத் தமிழரின் பிரதான பண்டைய நாடக வடிவங்களுள் ஒன்ருகக் கொள்ளப்படும் மேற்குலகில் இன்றைய நாடகவிற்பன்னர்கள் பலர் நாடகத்தின் சாராம்சத்தைத் தேடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். நடிகர், பார்வையாளர் என்ற பேதத்தை நீக்கி பார்வையாளரைப் பங்காளர்களாக்கும் திசை நோக்கி அந்நாடகப் பரிசோதனை முயற்சிகள் செல்கின்றன. இதனை எம் கூத்துக்களில் நாம் முன்னரேயே செய்துள்ளோம் போலத் தெரிகின்றது.


இத்தென்மோடி நாடகமரபிற்கென்று சில பிரத்தியேகமான அம்சங்களுள்ளன. ஆடல் பாடல் மூலமாக ஒரு கதையை நிகழ்த்தல் இதன் முக்கிய அம்சம். இன்றைய நாடக நடிப்பு முறைகள் பலவற்றை இன்று இக்கூத்தாடும் நடிகர்கள் பெரும்பாலும் கையாளினும். இவர்களை அறியாமலேயே பண்டைய நடிப்பு முறைகளையும் இவர்கள் கைக்கொள்கின்றனர். பாத்திரம் தன்னைத்தானே அறிமுகம் செய்தல், சபையோரைப் பார்த்தபடியே எப்போதும் பேசுதல், எப்போதும் மேடையின் முன்பக்கம் வந்து தன் பாகங்களைச் சபையோரிடம் ஒப்புவித்துச் செல்லல், உரத்த தொனியில் எப்போதும் உரையாடல், இயற்கைப் பாங்கில் அமைந்த நடை அசைவு என்பன இவற்றுள் சில.

உலக நாடக வரலாற்றை நோக்குமிடத்து நடிப்பு முறைகள் காலத்துக்குக் காலம் வேறுபட்டு வந்தமையை அவதானிக்கலாம். எதற்கும் ஒரு வரலாறு இருப்பதுபோல நடிப்புக்கும் ஒரு வரலாறு உண்டு. நடிப்பு வரலாற்றின் பின்னணியில் தென்மோடிக்கூத்தின் நடிப்புமுறை ஆராயப்படவேண்டும்.

இன்று கூத்துக்களை நடத்தும் இளம் தலைமுறையினர் பலர் சினிமாவைப்போலவே கூத்துக்களையும் செய்வதிற்பெரும் சிரத்தை

காட்டுகின்றனர். சினிமா நடிப்பு. சினிமா உடுப்பு. சினிமாப்பாடல் என்பவற்றைக் கூத்துக்களிலும் கையாள முயலுகின்றனர். கூத்து வேறு. சினிமா வேறு. இரண்டும் இருவேறுபட்ட கலை ஊடகங்கள். இதன் உண்மையை இவ்விளம் தலைமுறையினர் உணரவேண்டும். அல்லாவிடின் கூத்தும் அல்லாத, சினிமாவும் அல்லாத ஒரு புது வகைக்கூத்துக்கள்தான் நம்மத்தியில் தோன்றும்.

இக்கூத்தில் ஈடுபட்டுழைக்கும் இளம் தலைமுறையினருக்கு இன்னுமோர் கடமையுமுண்டு. இக்கூத்து சம்பந்தமான நூல்கள் அனைத்தையும் தேடித்தொகுப்பதும். இக்கூத்துக்கு இதுவரை உழைத்த அண்ணாவிமார். நடிகர். பாடகர். இசைகாரர். ஒப்பனை காரர். மேடையமைப்போர் பற்றிய தகவல்களைத் திரட்டிச் சேகரிப்பதும் நமது கடமையாகும்.



வசதியும், செல்வாக்கும் மிக்க அண்ணாவிமார்களினதும் நாடகக்காரர்களினதும் பெயர்கள் வெளியில் தெரியுமளவுக்கு வசதி குறைந்த செல்வாக்கற்ற திறமையான அண்ணாவிமார்களின் பெயர்கள் வெளியிற் தெரியவில்லை. அப்பெயர்கள் மக்கள் மனதில் மாத்திரம் தானுள்ளன. மக்கள் மனதில் மாத்திரம் பதிந்துள்ள மதிப்பிற்குரிய அப்பெயர்கள் வெளியிற் கொணரப்பட வேண்டும்.

# ஆத்ம கொலைகள்



தமயந்தி

இரவாகியும் இருளாத பகல். இரவு எட்டு மணிக்கு மேலாகிவிட்டது. பூமிக்கு வெய்யில் வாரி இறைத்தபடி அடிவானிற் புதைய அடம்பிடித்துக் கொண்டிருந்த சூரியன்.

காலை எட்டு மணிக்கு வீட்டை விட்டுப் புறப்பட்டுப் போனவன், இப்போதுதான் வீடு திரும்பியிருந்தான். கருணாகரன் எண்ணைக் கொம்பனி ஒன்றில் வேலை செய்கிறான் (விலாசமாகச் சொன்னால் இப்படித்தான் சொல்ல முடியும்) எண்ணைக் கொம்பனியில் என்ன வேலையென்றால்..? வேறென்ன...? கழுவும் வேலைதான். அது முடித்து வங்கியொன்றில் , காசாளராயில்லை, கழுவுபவராய்தான். இரண்டு வேலையும் முடித்து வீட்டிற்கு வந்து சேர இரவாகி விடும். ஞாயிறும் சில விடுமுறை நாட்களும் தவிர்ந்த ஏனைய நாட்களில் இது வழமை.

தபாற்பெட்டியைத் திறந்ததும் நீல உறைக் கடிதமொன்று அவன் கையில் பவ்வியமாக சாய்ந்து கொண்டது. அத்தோடு சில விளம்பரக் குப்பைகளும். விளம்பரங்கள் குப்பைத் தொட்டியிற் சேர நீல உறைக் கடிதம் மட்டும் அவனது கையில்- ஊரிலிருந்து தவமணி அக்காவின் கோணல் மாணலான குண்டுகுண்டான எழுத்தில் முகவரி அழுதது. எழுத்து மட்டுமல்ல, அதற்குள் அடங்கியிருக்கும் விடயமும் 'குண்டு' போலத்தான் இருக்கும் என்பது அவனுக்குத் தெரியும். முன்பெல்லாம் வீட்டிலிருந்து கடிதம்

வந்தால் உடனே படித்து விடுவான். இப்போ இலங்கை முத்திரை ஒட்டப்பட்ட தபாலுறைகளை கண்டாலே கருணாகரனுக்கு ஒருவித வெறுப்புத் தோன்றும்.

குளித்து முடித்து, எதையாவது சாப்பிட்டு விட்டு கடிதத்தை ஆறுதலாகப் படிக்கலாம் என எண்ணியவனாய் கடிதத்தை மேசை மீது போட்டு விட்டுக் குளியலறைக்குள் நுழைந்து கொண்டான்.

கருணாகரன் நோர்வே மண்ணில் வந்து விழுந்து பத்து வருடங்கள் ஓடியே விட்டன. முப்பத்தி ஒன்பது வயது முடிந்து, வரும் வசந்த காலத்தோடு நாற்பது வயதையும் தொடப் போகிறான்.

கருணா நோர்வே வரும்போது இளமை குலையாத, அழகிய ஆண் மகனாய்த்தான் வந்தான். இந்தப் பத்து வருட இடைவெளியில் உச்சந்தலையில் வட்டமாய் முடி உதிர்ந்து சொட்டையாகி கன்னங்கள் ஒட்டி எலும்புகள் துருத்தி நிற்க ஓர் கிழத்தன்மை அவனைப் படர்ந்திருந்தது.

அப்பர் கதிரவேலரும், அம்மா சிவபாக்கியம் அடுக்கடுக்காய் தவமணி, சிவமணி, நாகமணி, ஜோதீஸ்வரி என்று நான்கு பெண்களையும் பெற்றுப் போட்ட பின் கருணாகரனைப் பூமிக்கு கொண்டு வந்துவிட்டு புத்திரப் பெருக்கத்தையே நிறுத்திக் கொண்டு விட்டனர். எல்லோருக்கும் மூத்தவளான தவமணி அக்காவுக்கு கல்யாணம் நடந்து முடிந்த மறுவாரமே கருணாகரன் நோர்வேக்கு வந்து விட்டான்.

அவன் இங்கு வந்த அடுத்தடுத்த வருடங்களிலேயே ஒவ்வொருவராய் சகோதரிகள் கல்யாணம் முடித்து விட்டனர். கதிரவேலர் அங்க இங்க என்று



பல இடங்களில் கடன் வாங்கி (வெளிநாட்டில் மகன் உழைத்து அனுப்புவான் என்று கூறித்தான்) பகட்டாகவும், மேலே மிதந்து விட்டோம் ; கௌரவத்தை காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தோடும், மாப்பிள்ளை வீட்டார் கேட்டதற்கு மேலாக சீதனம் கொடுத்து எல்லோரது கலியாணத்தையும் முடித்து விட்டார். இப்போ பலிக்கடாவாக கருணாகரன். சகோதரிகளுக்கு சீதனம் கொடுக்கவும், ஆடம்பரமாய் கொண்டாடப்பட்ட கல்யாணச்

செலவுக்காகவும் அப்பர் கதிரவேலர் பல இடங்களில் மாறிய கடனைத் தீர்ப்பதற்காகவும் அவனது வாழ்க்கையின் முக்கிய காலங்கள் கருகிவிட்டன.

ஆனாலும் கடன் பூராவும் தீர்ந்த பாடாயில்லை. இன்னும்பல லட்சங்களும், லட்சங்களின் வட்டிகளும் அவனைப் பயமுறுத்திக் கொண்டிருந்தன.

இவை தவிர நான்கு சகோதரிகளும் அடிக்கடி கடிதமெழுதி நச்சரித்தபடி தத்தமது கணவன்மாரை வெளிநாட்டிற்குக் கூப்பிடும் படியும், அப்பப்போ தமக்குத் தேவைப்படும் சில(ஆடம்பர) தேவைகளுக்காக பணம் அனுப்பும் படியும் ஒருவர் மாறி ஒருவர் எழுதிக் கொண்டே இருப்பார்கள். போன மாதந்தான் ஜோதீஸ்வரி அக்காவும், புருசனும் கொழும்புக்கு வந்து நின்று ரெலிபோனில் சுயசரிதை கூறிவிட்டு பணம் அனுப்பும்படி கட்டளை இட்டனர். ரெலிபோனில் கதைப்பது கூட அங்கேயிருந்து எடுக்க மாட்டார்கள்; கொழும்பில் ஒரு லொட்ஜ்ஜில் தங்கி நின்று தாம் நிற்கும் தொலைபேசி இலக்கத்தை ஒரு நிமிடத்திற்குள் அறிவித்து விடுவார்கள். அதன்பின் இங்கிருந்து தொலைபேசியில் தொடர்பு கொள்ள வேண்டும்.

பிள்ளைக்குப் பிறந்தநாள் கொண்டாடியதில் இருந்து பிள்ளை மாமா என்று அடிக்கடி சொல்வான், பாடுவான், ஹெலிகொப்டரைக் கண்டால் பொடியள் மாதிரி விழுந்து கிடந்து சுடுகிற மாதிரிச் செய்வான் என்பது உட்பட தாங்கள் எப்படிக் கொழும்புக்கு வந்து சேர்ந்தனர் என்ற மர்மக் கதைகள் இணைக் கதையாக இருக்க, தமது தேவைகளுக்கு இப்போ எவ்வளவு பணம் (தற்காலிகமாக) தேவை என்பது வரை தொலைபேசியிலேயே சுவை குன்றாமல் பேசி முடிப்பார்கள். தொலைபேசிக்கு நிறைய காசு செலவாகுமே என்ற கரிசனை இம்மியளவும் இருக்காது அவர்களிடம்.

அண்மைக் காலங்களாக நான்கு சகோதரிகளும் ஒருவர் மாறி ஒருவர் கொழும்பிற்கு வந்து கொண்டே இருக்கிறார்கள்.

இப்போ புதிதாய் எல்லோருக்கும்

# ஒருபாடல்..

கரைதனி லாடும் இலைகளி னோரம்
தென்றலும் மெல்ல இசைபாடும்
கரைதனில் மேவும் அலைகளினீரம்
கவிதைகள் கீறும் மணலோரம்

மலைமுக டோரம் கருமுகில் மேவும்
பாதையி னோரம் பனி தூவும்
மலரிதழ் மேலே தேனிகளுரும்
மணங்கமழ் பூவும் தேன் தூவும்

ஒரு மனு மனமந்தக் கரைதனிலே
தனிமையிற் துயருறும் நிலையினிலே
இயற்கையின் வதனமும் சுடுகிறதே
இருப்பதும் சுமையெனக் கனக்கிறதே.

இருவிழி கரைதனில் நீர்க்கோடு
தூசெனக் காற்றினில் மனக்கோடு
கோடுகள் சேர்ந்தொரு கோலமென
காலத்தில் வந்துகை சேராதோ?

தமயந்தி.

மூத்தவளான தவமணி அக்காவிடமிருந்து கடிதம். அதற்குள் ஏதாவது பெரிய வெடிபோல விடயம் இருக்கும் என்பது கருணாகரனுக்கு நன்கு தெரியும்.

குளித்து முடித்து, உடைமாற்றி, நேற்றைய கறியையும் சோற்றையும் ஒன்றாகப் பிரட்டி சூடாக்கி சாப்பிட்டு முடித்தபின், மேசையில் கிடந்த தவமணி அக்காவின் கடிதத்தை எடுத்துப் பிரித்தான். வழமையான பல்லவிகளுடன் இப்போ உடனே செய்ய வேண்டிய காரியம் இலங்கைக் காசு அம்பதாயிரம் ரூபாய் மட்டும் அனுப்பி வைத்தால் போதுமாம்.

தவமணி அக்காவின் கணவர் வெளிநாட்டிற்குப் போகப் போகிறாராம். நம்பிக்கையான ஏஜென்சி கிடைத்திருக் கிறதாம். காசுக்குப் பயப்படத் தேவையிலையாம். இடையில் ஆள் திருப்பி அனுப்பப்பட்டால் காசை முழுவதும் திருப்பி தருவார்களாம் என்று விபரமாக தவமணி அக்கா எழுதியிருந்தா.

எங்கேயாவது கற்சுவரில் தலையை அடித்துக் கொண்டு சாகவேண்டும் போல் இருந்தது அவனுக்கு. "ஏஜென்சி நம்பிக்கையானதாக இருக்கலாம், கொடுக்கும் பணத்திற்கு மோசம் வராமல் இருக்கலாம் ஆனால் பணத்திற்கு எங்கே போவது?" என்ற கேள்வியில் வெந்து கொண்டிருந்தவன் தவமணி அக்காவின் கடிதத்தில் ஓர் மூலையில், அவள் தனது கையெழுத்திற்கு கீழ் சிறியதாய் பெட்டிச் செய்திபோல் ஏதோ கிறுக்கியிருந்தாள்.

ஒருதடவை, இருதடவை.. மீண்டும் மீண்டும் பலதடவைகள் அதனைப் படித்தான். தனது கண்களில், அதன் பார்வையில் ஓர் நம்பிக்கையீனம். திரும்பத் திரும்பப் படித்தான். விழிகள் கசிந்து கண்ணீர் உருவாகி துளிகள் உதிர்த்தன. கடிதத்திலுள்ள எழுத்துக்கள் திரையிட்டு மறைந்தது போல் அவனது பார்வையிலிருந்து மறைந்தன. "சிவகாமி போன கிழமை மருந்து குடிச்சு செத்துப் போட்டாள் புருசனோட ஏதோ பிரச்சனையாம் அவள் உனக்குச் செய்த துரோகத்திற்கு கடவுள் நல்ல தண்டனை குடுத்திட்டார்" "அய்யோ...என்ர சிவகா...மி" அனையும் மீறி அவனது உதடுகள் குளறின. அவனது குளறலின் உரத்த குரல் அந்த வீட்டையே அதிர வைத்தது.

"நான் நேசிச்ச என்ர சிவகாமி செத்துப் போனாள்"

என்ன மட்டுமே நேசிச்ச என்ர சிவகாமி என்ன விட்டிடுப் போட்டாள். என்ர சிவகாமி எனக்குத் துரோகம் செய்யேல்ல. நான்தான் அவளுக்குத் துரோகம் செய்து போட்டன்.

என்ர சகோதரங்கள் . இந்த நாயளால என்ர சிவகாமி என்ன விட்டுப் போனவள்.

சகோதரங்களை கரை சேர்க்க வேணும், கடன் தீர்க்க வேணும், கொஞ்சம் பொறுத்துக் கொள்ளச் சொல்லியே இவ்வளவு காலத்தையும் நான் தள்ளிப் போட்ட தாலதானே சிவகாமிய வேற இடத்தில கட்டிக் குடுத்தவங்கள். எனக்காக அவள் எவ்வளவு காலம் பொறுத்துக் கொண்டிருந்தவள். தன்ர வீட்டுக்காரர் தன்ன இருக்க விடுகினமில்ல வேற இடத்தில கலியாணம் பேசுகினம், நீங்க என்ன சொல்லுறியளோ அத நான் கேக்கிறன் எண்டு பொறுப்ப என்னட்ட தானே விட்டவள். வீட்டுக்காரர் பேசி சம்பந்தம் செய்யிறது நல்லம்; என்னப் பார்த்துக் கொண்டிராத எண்டு அவளுக்கு நான்தானே எழுதினனான். அப்படியிருந்தும் அவள் திரும்ப திரும்ப என்னட்ட எழுதிக் கேட்டவள்தானே. நான்

பாவி நான்தான் அவளக் கொண்டு போட்டன். எல்லாம் என்னோட கூடப் பிறந்த நாயளாலதானே. தங்கட தகுதிக்கு மீறின ஆடம்பரங்களுக்காக என்னப் பலிக்கிடாயாக்கிப் போட்டாளவே. இப்ப அவளுக்கு கடவுள் தண்டன குடுத்துப் போட்டார் எண்டு சந்தோசப் படுகுதுகள். நான் இங்க வந்த பிறகு உவளவேக்கு என்ர சிவகாமி வீட்டு வேலையள எல்லாம் மாடு மாதிரி செய்து குடுத்தாளே அந்த நன்றி கூட இல்லாமல் இப்பிடிக் கதைக்குதுகளே..என்ர சிவகாமி என்ன மன்னிச்சுக் கொள்ளம்மா.." அவனது



ஆத்மா ஒப்பாரி வைத்துப் புலம்பி அழுதது. சிவகாமியை நோக்கி மண்டியிட்டு அழுதது.

அவளின் பாதங்களில் சாஸ்டாங்கமாக விழுந்து மன்னிப்புக் கேட்டுக் கதறியது.

சிவகாமி இப்போதுதானே செத்தாள். ஆனால் அவளது ஆத்மா எப்போதோ சாகடிக்கப்பட்டு விட்டது. அவளை நோக்கி இன்றொரு ஆத்மா இங்கே செத்துக் கொண்டிருக்கிறது. கருணாகரன் தனது மணிப்பேசிலிருந்த சிவகாமியின் படத்தைப் பார்த்து தேம்பித் தேம்பி அழுதான்.

"ஏ சமூகமே இன்னும் எத்தனை ஆத்மாக்களை கொல்லப் போகிறாய்?" என்று கேட்பது போல் கருணாகரனின் கையிலிருந்த படத்தில் சிவகாமி.

## காற்று இப்போ...

-தீபு-

உருஸ்சிய உயர் நீதிமன்றம்,
முன்னாள் சோவியத்ஒன்றிய-
-த்தின் கட்சியான சோவி-
யத் கொம்யூனிஸ்ட்கட்சியை
விசாரணை நடத்துவதற்காக
அதன் இறுதிப்பொதுச்செய-
-லாளரான கொர்பச்சேவை
நீதிமன்றத்திற்கு வருமாறு
பணித்துள்ளது".

கொம்யூனிஸ்ட் கட்சிக்கு உள்
நாட்டிலும் வெளிநாடுகளிலும்
உள்ள சொத்து சம்பந்தமாகவு-
-ம் கடந்தகால தவறுகளைப்-
-பற்றி ஆராய்வதற்காகவுமே
இவ்வாணை பிறப்பிக்கப்பட்டுள்-
-ளது". சமவுடமைத்தத்துவத்தை
தளமாகக்கொண்டு, மா மேதை
லெனின், ஸ்ராலின் போன்ற தலை-
-வர்கள் கட்டியெழுப்பிய கட்சி
சரித்திரம் காணாத திருத்தல்வாதிகளி-
-னால், சீர்குலைந்து போனபின்-
-னும் இன்று அது குற்றவாளியா-
-க நீதிமன்றத்தில் நிறுத்தப்பட-
-வுள்ளது".

காற்றுவெளி காற்றடிக்கும்
காற்று இப்போ
அவர்கள் பக்கம்

# நோர்வேயில் தேசிய தினமும் நிகழ்வுமே...

-பாரதன்-

17 வைகாசி, நோர்வே நாட்டின் தேசியதினம் நாடெங்கும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. ரோகலாண்ட் மாகாணத்தில் எப்போதுமேயில்லாதவாறு இவ்வருடம் நோர்வேஜிய மக்களுடன் இணைந்து வேறுபல நாட்டவர்களும் தமது பங்களிப்பை வெளிப்படுத்தி, அந்நாட்டு மக்களின் சந்தோசத்தில் பங்கெடுத்துக்கொண்டனர்.

ஸ்தவங்கரில் முதன்முதலாக குர்திஸ்தானைச் சேர்ந்த அகமட் போங்கிஸ்; இங்குவாழ் வெளிநாட்டவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தேசியதினவிழாக்குழுவில் இடம் பெற்றார்.

வழமைபோல் சர்வதேச கலாச்சாரமையத்தினால் தேசியதினவிழா கொண்டாடப்பட்டது. இதில்,





பதின்நான்கு நாடுகளைச்சேர்ந்த கலைப்படைப்புக்கள்;
அந்தந்தத்தேசத்தின் கலாச்சாரத்தைப்பிரதிபலிப்பனவாக
அரங்கேற்றப்பட்டன. இதில், தாய்லாந்து, குர்திஸ்தான்,
இந்தியா, கானா, வியட்நாம் போன்ற பதின்நான்குநாட்டு-
கலாச்சாரக் கலைப்படைப்புக்களுடன் முதல் தடவையாக
இங்கு வாழ் ஈழத்தமிழர்களின் கலை, கலாச்சாரத்தைப்-
பிரதிபலிக்கும் வகையில் செல்விகள், துஷந்தா, செலிஜா,
தர்சினி ஆகியோரின் நாட்டிய நிகழ்ச்சிகள் நடந்தேறின.

இச்சிறுமிகளின் நடனத் திறமைக்கு கூடியிருந்த பெருந்தொகை-
யானோரின் கரகொலியே சான்று. இவர்களின் [illegible] திறமை
சரியான முறையில் வளர்த்தெடுக்கப்படுமானால் எதிர்-
காலத்தில் சிறந்த நாட்டியக்கலைச்செல்வங்கள் உருவாகு-
மென்பது நிச்சயம்.

இதன்பின் நடந்த தேசியதின ஊர்வலத்தில்
தமிழர்கள் "கலையே உலகை உருவாக்குகிறது",
"இந்த உலகம் அனைவருக்கும் சொந்தமானது" போன்ற
சுலோகங்களுடன், நவீன சிற்பவடிவை வெளிப்படுத்தும்
பிரமாண்டமான யானை உருவமொன்றை ஊர்வலத்தில்
நகர்த்திச் சென்றனர்.

தேசியதின விழாவிற்கு ஐம்பது-
க்கும் மேற்பட்ட தமிழர்கள் வந்திருந்தும் ஏழு தமிழர்
மட்டுமே ஊர்வலத்தில் கலந்துகொண்டார்களென்பது
வருந்தத் தக்க விடயம். மேலும்,

தலைநகரில் நடைபெற்ற தேசியதின ஊர்வலத்தின்முடிவில்
இலங்கைத்தமிழச் சிறுவன் யூட்சன் உரையாற்றினார்
என்பதும் குறிப்பிடத் தக்கது.

-----------



1984 தை 20, நோர்வே நாட்டின் மாநகரசபை மேலாளரொருவர் ஒஸ்லோ விமானநிலையத்தில் வைத்து, ஒஸ்திரியாவிற்குப் பயணப்படக் காத்திருந்தபோது கைது செய்யப்பட்டார். அவர்தான் ஆனர்றே கோல்ட்.

நோர்வேயின் வெளிநாட்டலுவல்களமைச்சில் முக்கியபதவி வகித்துவந்த இவர் பிரபல அரசியல்வாதியும், ராஜதந்திரியுமாவார்.

இவர் வெளிநாட்டலுவல்களமைச்சில் பதவிவகித்துவந்தபோதும் அதன்பிற்பாடும் கொம்யூனிஸ்ற் நாடுகளுக்கெதிரான நோர்வேயின் அரசியற் செயற்பாடுகள், நேட்டோநாடுகள் பாதுகாப்புச்சம்பந்தப்பட்ட ரகசியங்களையும் காலஞ்சென்ற சோவியத்யூனியனின் உளவுப்படையான கே.ஜி.பி க்கு வழங்கியதுடன், நோர்வே வெளிநாட்டலுவல்களமைச்சில் கே.ஜி.பி யின் உளவாளியாகவும் செயற்பட்டார்.

ஆர்ன கைதுசெய்யப்பட்டபோது, அவரது கைப்பெட்டியில் நோர்வேயின் பாதுகாப்பு, ராணுவம் சம்பந்தப்பட்ட ஆவணங்களும், மற்றும்பல இரகசிய தஸ்தாவேஜுக்களும் கைப்பற்றப்பட்டன.

இவர் வியன்னாவில் (ஒஸ்திரியா) கே.ஜி.பி யின் தளபதியான கெஜடிச் ரீற்றோராவைச் சந்தித்து மேற்படி ஆவணங்களை ஒப்படைப்பதற்காகவே பயணப்படவிருந்தார்.

பின் ஒருவருட தடுப்புக்காவலில் வைக்கப்பட்டு; தை- 1985இல், சோவியத்யூனியனுக்கும், ஈராக்கிற்கும் உளவாளியாக செயற்பட்டதாக குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டார். அவரின் செயற்பாடுகளை நிரூபிக்க அமெரிக்க உளவுஸ்தாபனமான சி. ஐ. ஏ-யினால் வழங்கப்பட்ட பல ஆதாரங்களும், ஆரன கே. ஜி. பி அதிகாரிகளுடன் பல விடயமாக "சுவிற்சர்லாந்தில் சந்தித்தபோது எடுக்கப்பட்ட புகைப் படங்களும் சமர்ப்பிக்கப்பட்டன.

1985 ஆனி மாதம் ஆரனுக்கு அதிகபட்ச தண்டனையான 20வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

7வருட சிறைத்தண்டனை ஆரனை உடல், உளவியல் ரீதியாகப் பாதித்துவிட்டது. அதனால் தண்டனையைக் குறைத்து, கருணையின்அடிப்படையில் விடுவிக்குமாறு கோரி மந்திரிசபைக்கு விண்ணப்பித்துள்ளார். அவரின் விண்ணப்பம் மந்திரிசபையால் ஆராயப்படாமல் பல மாதங்களாக இழுத்தடிக்கப்படுகிறது. இதனை எதிர்த்து, அன்று ஆரன கடுமையாகத்தண்டிக்கப்படவேண்டுமென்று- கருத்துத்தெரிவித்த நோர்வேஜியமக்கள் பலர் இன்று அவருக்கு ஆதரவாக, அவர் விடுதலை செய்யப்படவேண்டுமென்று குரல் கொடுக்கின்றனர். சோவியத்யூனியன் இல்லா நிலை, அதனால் தேசத்திற்கு ஆரனதிறம் கொண்டால் இனி பாதிப்பு இல்லை என வாதிடுகின்றனர்.

சமுகநல அமைப்புகளும், மாணவர் முன்னணிகளும் அவரை விடுதலை செய்யக்கோருவதுடன் அவரை அழைத்து அவரது சிறைவாழ்க்கை பற்றி கருத்தரங்குகளும், பகிரங்கக்கூட்டங்களும் நடாத்துகின்றன.

கடந்த வைகாசிமாதம் 6ம் திகதி ஸ்தவங்கரில் கூட்டமொன்றிற்கு வருகைதந்திருந்த ஆரனை ஆரத்தழுவி தமதுஆதரவைத் தெரிவிக்க பலர் முயன்றதைக்காணக்கூடியதாக இருந்தது.

300 பேர்மட்டுமே கலந்துகொள்ள ஒழுங்கு- படுத்தப்பட்ட மண்டபம், அதிலும் பன்மடங்கு கூடுதலானமக்களால் நிறைந்து காணப்பட்டது. அங்கு எல்லோர் கவனத்தையும் ஆரனவுக்கு அடுத்ததாகக் கவர்ந்தது, ஆரன சிறையிலிருந்தபோது அவருடன் கடிதத்தொடர்பு வைத்திருந்த ஏழு வயதுச் சிறுமியொருத்தி. அவள் தனது கடிதக் கதாநாயகனை முதல்தடவை சந்தித்தாள்.

அக்கூட்டத்தில் ஆரன பேசும்போது, சிறையில் தான் எழுதிய தனது நாட்குறிப்பை வாசித்துக்காட்டி, நோர்வே சிறைத் தண்டனை முறையில் உள்ள சீர்கேடுகளை எடுத்துரைத்தார்.

எமது கீழ்த்தேய நாடுகளில் இப்படியான ஒருவருக்கு என்ன நடந்திருக்கும்? தூக்கிலிடப்பட்டிருப்பார், அல்லது சுட்டுக்கொல்லப்பட்டிருப்பார். அப்படியல்லாமல் உயிருடன் விட்டார்களானால், உளவியல் ரீதியாக அந் நபரைப் பாதிப்படையச்செய்து, ஒர் பைத்தியமாகத் தான் உலவ விட்டிருப்பார்கள்.


அரசியலில் எதிர்க்கருத்துள்ளவர்களையே தேசத்துரோகிகள், சமூகவிரோதிகள், எட்டப்பர்கள், கைக்கூலிகள் என்றெல்லாம் வர்ணித்து உளவியல்ரீதியாகப் பாதிப்படையவைத்து செயலிழக்கச்செய்யும் நம்மவர் உண்மையிலேயே தேசத்துரோகியான ஊரின போன்றவர்களை என்னசெய்வார்களென கற்பனை பண்ணிப் பார்க்கவே முடியாது.

எமது கலை, கலாச்சாரம் மேன்மையானது, கல்தோன்றி மண்தோன்றாக்காலத்தில் உருவானது என்றெல்லாம் தம் பட்டமடிக்கும் நாம், சீர்கெட்ட கலாச்சாரம், கற்பில்லாக் கலாச்சாரம் என்று நம்மவரால் கணிக்கப்படும் (?) கலாச்சாரத்தைக் கொண்டுள்ள இந்த மக்களின், தேசத்துரோகியைக்கூட மன்னிக்கும் பண்பை, மனிதாபிமானத்தை, மனிதநேயத்தைக் கொண்டுள்ளோமா என்றால், இல்லை. அதற்கு எமது வரலாறே சாட்சி. வயிற்றுப்பசிக்காக மாங்காய் தேங்காய் களவெடுத்தவன், பொக்கற் அடித்தவன், கோழி பிடித்தவன் எல்லாம் மின், தந்திக்கம்பங்களில் கட்டிச் சுடப்பட்டபோதும், மனித உரிமைக்காக குரல்கொடுத்தவர்கள் துரோகிகள் என்றபெயரில் சுட்டுக் கொல்லப்பட்டபோதும் பார்த்தும் மௌனிகளாய் இருந்தவர்கள் நாம்.

இங்கு நான் கேட்க வருவது, துரோகிகளை மன்னிக்கச்சொல்லியல்ல, காலங்காலமாக ஆயிரக் கணக்கில் துரோகிகள் என்று பட்டஞ்சூட்டப்பட்டு அப்பாவிகள்பலர் கொல்லப்பட்டுவரும்போதும், காரணமெதுவுமின்றி சிறைகளில் துன்பம் அனுபவிக்கும்போதும் நாம் என்ன செய்தோம்??, இனி என்ன-- செய்யப்போகிறோம்?, என்பதுதான்.

தேசம்விட்டு தேசம்வந்தநாம், குடிவந்த தேசத்தின் கலை, கலாச்சாரத்தின் சில நல்ல தன்மைகளைத்தான் பின்பற்றவிட்டாலும்; இந்த மக்களின் , மனிதனை மனிதன் மதிக்கும் பண்பை, மனித உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கும் தன்மையை இனியாவது பின்பற்றி, அதனை கருத்திற்கொண்டு எமது அடுத்த தலைமுறைக்காவது ஒரு நல்ல எதிர்காலத்தை உருவாக்குவோம்.

சங்கரன்
ஸ்டவங்கர்




அன்புப் பெற்றோர்களே

"சுமைகளுக்கு" வந்துள்ள ஏராளமான விமர்சனக் கடிதங்களில் சிறுவர்களுக்காக சில பக்கங்களை ஒதுக்கும்படி கருத்துக்கள் தெரிவிக்கப் பட்டிருந்தன. அதன்பொருட்டு இந்த இதழில் சிறுவருக்கென சில பக்கங்களை ஒதுக்கியுள்ளோம். இது தொடர்பாக பெற்றோராகிய உங்களிடமிருந்து கருத்துக்களை எதிர் பார்க்கின்றோம்.

நன்றி

"சுமைகள்" வெளியீட்டுக்குழு.



# சின்னப் பூக்கள்




ஆதிகாலத்து மனிதன் பேசும் திறமை பெற்றபின், பல நூறு ஆண்டுகளின் பின்பே, தாம் பேசும் மொழியை சித்திர வடிவில் உருவம் அமைத்தான். அந்த சித்திரவடிவில் அமைந்த மொழியானது, காலப் போக்கில் பல தடவை மாற்றமடைந்து; சுகமாக எழுதும் வடிவத்தில் அமைந்தது. தற்போதும் நாம் எழுதிவரும் தமிழ் எழுத்தில், சீர்திருத்தம் - செய்யப்பட்டுள்ளது. அவையாவன:


| பழைய உருவம்: | புதிய உருவம்: |
| --- | --- |
| ணா | ணா |
| ணொ | ணொ |
| ணோ | ணோ |
| ணை | ணை |
| லை | லை |
| ளை | ளை |
| றா | றா |
| றொ | றொ |
| றோ | றோ |
| னா | னா |
| னை | னை |
| னொ | னொ |
| னோ | னோ |

# உங்கள் திறமைக்கு


படத்திற்குரிய பெயர்களைச் சரியாக எழுதிக் கொள்ளுங்கள்.




ஆ___




___ன்.




ப ___ வை.




___லி.




ப___.




___ ___ ளை.




கங்___ரு.



சே___ ல்.



மு___ ல்.



வ___ணாத்திப்___ச்சி.

# அதிக ஆசை.



--புல்கேரிய நாட்டுக் கதை--

பல ஆண்டுகளுக்கு முன் ஒரு கிராமத்திலுள்ள அழகிய நதிக்கரை ஓரத்தில் ஒரு எழை மீனவன் குடிசை அமைத்து தனது மனைவியோடு மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தான்.

அவன் தனது குடிசையின் முன்னால் உள்ள நதியில் தினமும் மீன் பிடித்து விற்று தனது அன்றாட வாழ்க்கையைக் கழித்து வந்தான்.
வழமைபோல் ஒருநாள் அவன் மீன் பிடிப்பதற்காக வலையுடன் நதியில் இறங்கினான்.

நீண்ட நேரமாக வலை வீசியும் மீன் எதுவுமே அகப்படவில்லை. அவன் மிகவும் களைத்துப் போனவனாய் கடைசி முறையாகத் தன் வலையைத் தண்ணீரில் வீசினான்.

தண்ணீரில் வீசிய வலையை இழுக்கும்போது மிகவும் பாரமாய் இருந்தது. மிகவும் சிரமப்பட்டு வலையைக் கரையில் இழுத்துப்போட்டான்.
மீனவனுக்கு ஒரே ஆச்சரியம். காரணம்; அவனது

வலையில் அகப்பட்டிருந்தது ஒரு பெரிய தங்கமீன்.

மீனவன் அந்தத் தங்கமீனை அடித்துக் கொல்ல முனைந்தபோது, அந்த மீன் என்னை அடித்துக் கொன்று விடாதே, நீ கேட்பதெல்லாம் நான் உனக்குத் தருகிறேன் என்றது.

மீனவன் அதிசயித்து நின்றான். மீண்டும் அந்த தங்கமீன் அவனைப் பார்த்துக் கேட்டது மீனவனே உனக்கு என்ன வேண்டுமென்று கேள் தருகிறேன் என்றது. அதற்கு அம் மீனவன் தனக்கு எதுவுமே வேண்டாம் என்று கூறி அந்தத் தங்க மீனை மீட்டு தண்ணீரில் எறிந்தான்.

வெறுங் கையோடு வீடு திரும்பிய மீனவன் தனது மனைவியிடம் நடந்தவற்றைக் கூறினான்.

மீனவனின் மனைவி கோபங்கொண்டு தன் கணவனை வாய்க்கு வந்தபடியெல்லாம் ஏசி விட்டு அந்தத் தங்க மீனிடம் தனக்கு அழகான உடை கேட்கும்படி கூறினாள்.

மறுநாட் காலை மீனவன் நதிக்கரைக்குச் சென்று தங்கமீனை அழைத்துத் தன் மனைவியின் ஆசையைக் கூற, தங்கமீனும் அதற்குச் சம்மதித்து மறைந்தது.

வீட்டிற்குச் சென்ற மீனவனுக்கு ஒரே ஆச்சரியமாயிருந்தது. காரணம், அவனது மனைவி மிகவும் அழகான, விலையுயர்ந்த உடையை அணிந்திருந்தாள். அப்படியிருந்தும் அவனதுமனைவியின்

மனம் திருப்திப் படவில்லை. அவள் தன் கணவனிடம், மீண்டும் அந்த மீனை அழைத்து தனக்கு பெரிய வீடொன்று தேவையென கேட்கும்படி கூறினாள். மீனவனும் அதற்குச் சம்மதித்து மறுநாள் நதிக்கரைக்குச் சென்று தங்கமீனை அழைத்து தன் மனைவியின் ஆசையைக் கூறினான். மீனும் ஆகட்டும் என்று கூறி மறைந்தது.

மீனவன் தனது வீடு நோக்கிச் சென்றான். அங்கே அவனது ஓலைக்குடிசையைக் காணவில்லை ஆனால் அதற்குப் பதிலாக ஓர் அழகான பெரிய கல்வீடு இருந்தது. ஆனால் அன்றும் அவனது மனைவிக்கு மனம் திருப்திப்படவில்லை.

மீண்டும் அவள் தன் கணவனிடம் அந்தத் தங்கமீனிடம் பெரிய அரண்மனை கேட்கும்படி தொல்லைப் படுத்தினாள். மீனவனும் சம்மதித்து மறுநாள் நதிக்கரைக்குச் சென்று தங்கமீனை அழைத்து அரண்மனையும், வேலைக்காரரும் தேவை என்று கேட்டான். அதற்கும் அந்தத் தங்கமீன் சரி என்று சம்மதித்து மறைந்து போனது.

மீனவன் பலவிதமான கற்பனைகளுடன் தனது வீட்டை நோக்கிச் சென்றான். அங்கு மீனவனுக்குப் பெரும் ஏமாற்றம் காத்திருந்தது. அரண்மனையோ, வேலைக்காரரோ அங்கே இருக்கவில்லை.

ஏற்கனவே இருந்த அழகிய வீடும் மறைந்து, முன்பு இருந்த பழைய ஓலைக் குடிசையும், பழைய உடை அணிந்தவளாய் தன் மனைவியையும் கண்டான். இப்போ பேராசை பெருநட்டம் என்பதை உணர்ந்தான் மீனவன்.

## உங்களுக்குத் தெரியுமா?

1. இலங்கை ஆங்கிலேயரிடமிருந்து சுதந்திரம் அடைந்த நாள் எது?
2. இலங்கையின் சுற்றளவு எத்தனை சதுரமைல்?
3. சிகிரியா கோட்டையை அமைத்த மன்னனின் பெயர் என்ன?
4. சிகிரியாக் கோட்டை எங்கு அமைந்துள்ளது?
5. இலங்கையின் அதிக வருமானத்தைத் தேடித்தரும் பயிர்கள் எவை?
6. உலகில் சனத்தொகை அதிகமான நாடு எது?
7. உலகை எத்தனை கண்டங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளது?
8. உலகிலுள்ள கண்டங்களின் பெயர்கள் என்ன?
9. ஓடி விளையாடு பாப்பா என்ற பாடலைப் பாடியவர் யார்?
10. சந்திரனுக்குச் செல்வதற்கு வழி காட்டிய நாடு எது?
11. சந்திரனுக்குச் செல்ல வழி காட்டியவர் யார்?
12. வட மாகாணத்திலுள்ள மிகப்பெரிய குளம் எது?
13. இலங்கையில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற இயற்கைத் துறைமுகம் எது?
14. இலங்கையின் மிகப்பெரிய காகிதத் தொழிற்சாலை எங்கு உள்ளது?
15. இலங்கையின் புகையிரதப் பாதை எந்த நாட்டவரால் நிறுவப்பட்டது?

( குழந்தைகளே, விடைகளை முயற்சித்துக் கண்டு பிடியுங்கள் )

# புதிய ஆத்திசூடி

—: o :—



மகாகவி சுப்பிரமணிய பாரதியார்.

1. அச்சந் தவிர்
2. ஆண்மை தவறேல்
3. இளைத்த லிகழ்ச்சி
4. ஈகை திறன்
5. உடலினை உறுதிசெய்
6. ஊண்மிக விரும்பு
7. எண்ணுவ துயர்வு
8. ஏறுபோல் நட
9. ஐம்பொறி ஆட்சிகொள்
10. ஒற்றுமை வலிமையாம்
11. ஓய்த லொழி
12. ஔடதங் குறை
13. கற்ற தொழுகு
14. கால மழியேல்
15. கிளைபல தாங்கேல்
16. கீழோர்க் கஞ்சேல்
17. குன்றென நிமிர்ந்துநில்
18. கூடித் தொழில் செய்
19. கெடுப்பது சோர்வு
20. கேட்டிலுந் துணிந்து நில்
21. கைத்தொழில் போற்று
22. கொடுமையை யெதிர்த்துநில்

அடுத்த இதழில் தொடரும்

# நாடக மனிதர்கள்



பதாகைகள்
வானத்து வயிற்றில் இடிக்க
நீண்ட ஊர்வலம்.

இறுகப் பூட்டிய
இரும்பு யன்னலூடாக
விழி எறிந்தேன்.

என்னை அடைத்தவர்கள்
முன்வரிசையில்
ஓங்கிய குரலெடுத்து
கோஷம் பாடிச் சென்றனர்.

கொடி பிடித்துச் சென்ற
சிலர் வந்து
என்னை
அடக்கிவிட்டுச் சென்றனர்.

இரும்பு யன்னலின்
சிறிய துவாரமும்
இப்போ
அடைக்கப் பட்டுவிட்டது.

காற்றுக்குத் தடை
விதிக்கப்பட்டு விட்டது.
வீதியில் உலவ அனுமதி
மறுக்கப் பட்டுவிட்டது.

கூக்குரலிடுகிறார்களே
ஏன்......?
கொடி பிடிக்கிறார்களே
எதற்கு....?

யாரோ சொன்னார்கள்:
பெண் விடுதலை யாசித்து
நடக்கிறார்களாம்.
(நடக்கட்டும் நாடகம்)

பானுபாரதி



எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.